செ.வெ.எண்.8 நாள்.04.08.2017

## மணல் லாரி உரிமையாளர்கள் கவனத்திற்கு.

தமிழ்நாடு அரசின் மணல் இணைய சேவையில் மேற்கொள்ளப்படும் வாகனப்பதிவுகளில் எழும் முறைகேடான பதிவுகளை தவிர்க்கும் பொருட்டு வாகனப்பதிவுகளில் எழும் முறைகேடான பதிவுகளை தவிர்க்கும் பொருட்டு வாகன ஆவணங்களை சரிபார்த்தலுக்கான சிறப்பு முகாம் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 07.08.2017 முதல் 11.08.2017 வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை வட்டார போக்குவரத்து அலுவலர்களால் கரூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள பொதுப்பணித்துறை அமராவதி திட்ட இல்ல வளாகத்தில் நடத்தப்பெற உள்ளது. வாகன உரிமையாளர்கள் www.tnsand.in. என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள படிவத்தில் தங்கள் வாகனத்தின் நடப்பிலுள்ள வாகன பதிவு புத்தக விபரம் (RC Book), வாகன அனுமதிச்சான்று (Permit), வாகன தகுதிச்சான்று (FC), சாலை வரி ரசீது (Road Tax Receipt) மற்றும் காப்பீடு விபரங்கள் (Insurance Details) ஆகியவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்து, இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்படும் படிவத்துடன் முகாமிற்கு வரவேண்டும். பதிவேற்றிய மேற்காணும் ஆவணங்களுக்கானஅசல் சான்றுகளை அவற்றுக்கான நகல்களுடன் சிறப்பு முகாமில் காண்பித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இம்முகமானது வாகனத் தரவுகளை ஒழுங்குபடுத்த நடைபெறுகிறது. இம்முகாமிற்கு வாகனங்களை கொண்டுவர வேண்டாம். முகாமில் ஆவணங்கள் சரிபார்பு மேற்கொள்ளும் வாகனங்கள் மட்டுமே இணையதள மணல் சேவையினை பயன்படுத்திக்கொள்ள முடியும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்